மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண்.177/2022
வா.சா.2

பெயர் : தர்மலிங்கம் தேதி : 01.08.2024
வயது : த/பெ :
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 01ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

குறுக்குவிசாரணை

1. இந்த வழக்கின் வாதி பிரதிவாதிகளை தெரியும். ஜெயராஜ் நாடாரும், ஜெயபார்வதியும் சீனிவாசன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வழக்கு சொத்தில் சீனிவாசன் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் கொட்டகை அமைத்து குடியிருந்து வருகிறார். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் கொட்டகை அமைத்து குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் வழக்கு மூலத்தில் சீனிவாசன் கொட்டகை அமைத்து குடியிருந்து வருவதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்து வாதிகள் மற்றும் 2ம்பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் 2ம் பிரதிவாதி யார் என்றால் பாஸ்கர்.

2. 2ம் பிரதிவாதி அவரது சொத்தை யாருக்கும் விற்று உள்ளாரா என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி அவரது சொத்தை வேறு ஒருவருக்கு விற்றுஉள்ளார் என்றாலும், 2ம் பிரதிவாதி அனுபவத்தில் சொத்து இல்லை என்றாலும் தெரியாது. நிருபண வாக்குமூலத்தில் பிராது தபசில் சொத்தை வாய்மொழி பாகப்பிரிவினை செய்துஉள்ளதாக சொல்லி உள்ள நிலையில் எப்போது பாகம் பிரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த ஏற்பாடு ஆவணத்தை நான் பார்க்கவில்லை.

3. தபசில் சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு எந்தவயலை எழுதிக்கொடுத்து உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை இந்த வழக்கில் சாட்சி சொல்ல ஜெயராஜ் நாடார் அழைத்து வந்தார். எனக்கும், ஜெயராஜ் நாடாருக்கும் 58 வருடகாலமாக பழக்கம். தபசில் சொத்து கடற்கரை நாடாருக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை கடற்கரை நாடார் காலம் சென்ற பிறகு தன் மகன்களான ராமசாமி, செல்லத்துரை, முத்துசாமி ஆகியோர்களுக்கு எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் தெரியாது. சொத்து அவர்களிடம் தான் உள்ளது. கடற்கரை நாடார் காலம் சென்ற பிறகு தன் மகன்களான ராமசாமி, செல்லத்துரை, முத்துசாமி ஆகியோர்களுக்குள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லி உள்ளது பொய் என்றால் சரியல்ல.

4. தபசில் சொத்தை செல்லத்துரை நாடாரோ , இராமசாமி நாடாரோ அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதியும், 2ம் வாதியும் தபசில் சொத்தை ஒரு போதும் அனுபவம் செய்தது கிடையாது என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் 58 கால வருட பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அழைக்கிறேன் என்றால் சரியல்ல. சீனிவாசனும் எனக்கு பழக்கம் தான்.

மறு விசாரணை இல்லை.

ஒப்பம்/-

சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.